TRAINING PROGRAMME ON

PRE-RETIREMENT COUNSELLING



Organised and conducted by

ANNA INSTITUTE OF MANAGEMENT

"MAHIZHAMPOO"
163/1, P.S.Kumarasamy Raja Salai,
(Greenways Road) Chennai-600028.

அறிமுக விபரம்

ஓய்வூதியரின் பெயர் :

முகவரி :

கைபேசியின் எண் :

ஓய்வூதியம் வழங்கும் புத்தகம் பி.பி.ஓ. எண் :

பிறந்த தேதி :

பணிநிறைவு பெற்ற நாள் :

கடைசியாக வகித்த பதவி/ துறை :

கருவூலத்தின் பெயர் :

கருவூலத்தின் தொலைபேசி எண் :

ஓய்வூதியம் பெறும் வங்கியின் பெயர் :

வங்கி சேமிப்பு கணக்கு எண் :

வங்கியின் IFC Code எண் :

பான்கார்டு எண் :

ஆதார் அட்டை எண் :

இரத்தப் பிரிவு வகை :

T.K.RAMACHANDRAN, I.A.S.,
Principal Secretary / Director,
Anna Institute of Management and
Director General of Training.

ANNA INSTITUTE OF MANAGEMENT
163/1, P.S. Kumarasamy Raja Salai,
Chennai - 600028.

MESSAGE

Retirement is often a stressful period for many Government officials. After having served in the Government for several decades they suddenly find themselves without any activity and this can cause some doubts and apprehensions. But this is quite unwarranted and all Government servants should treat 'retirement' as an opportunity to take up activities for what they had no time while in service.

Also, all Government servants should prepare themselves for retirement in advance financially, physically and mentally.

This course being run by Anna Institute of Management is an attempt to provide pre-retirement counselling to officials so that they can plan in advance for retirement.

The study material prepared for this training programme covers many useful topics in simple language for you to follow to ensure a carefree post-retirement life. My personal wish would be that each Government servant through savings should build a house of his own and get his children educated and settled in life during the course of his service. This gives room for them to be economically independent using their post-retirement benefits.

I congratulate Thiru S.Rajendran, Joint Director / Programme Co-ordinator of this training programme on "Pre-Retirement Counselling" for bringing out such a useful material covering all aspects of life for a person in-waiting for superannuation.

(**T.K. RAMACHANDRAN, I.A.S**)
Principal Secretary/Director,
Anna Institute of Management and
Director General of Training, Chennai -600 028.

உள்ளடக்கம்

1. பணிப்பதிவேட்டில் பதிவுகள் – 01
2. ஓய்வூதிய முன்மொழிவுகள் அனுப்புதல் – 02
3. ஓய்வூதிய பலன்கள் – 02
4. கருவூலத்தில் ஓய்வூதியம் பெற அளிக்க வேண்டிய ஆவணங்கள் – 05
5. முதல் ஓய்வூதியம் பெறுவதற்கு அளிக்க வேண்டிய ஆவணங்கள் – 07
6. குடும்ப ஓய்வூதியம் பெற அளிக்க வேண்டிய ஆவணங்கள் – 08
7. வாழ்வு கால நிலுவைத் தொகை பெறுவதற்கு அளிக்க வேண்டிய ஆவணங்கள் – 09
8. குடும்ப ஓய்வூதியம் – 10
9. குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியான குடும்ப உறுப்பினர்கள் – 10
10. திருமணமாகாத/விவாகரத்தான/விதவை/ஆதரவற்ற மகள்/ மாற்றுத் திறனாளி/மனநிலை பாதிக்கப்பட்ட மகன் மற்றும் மகள் ஆகியோர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் – 11
11. கூடுதல் ஓய்வூதியம் – 12
12. கம்யூடேசன் தொகை முடிவுறுதல் – 13
13. நேர்காணல்/வாழ்வுகால சான்று – 14
14. ஓய்வூதிய புத்தகத்தில் பதிவுகள் – 14
15. ஓய்வூதியர் புதிய மருத்துவ காப்பீட்டுத்திட்டம் – 15
16. ஓய்வூதியர் இறந்துபோன பின்பு குடும்பத்திற்கு கிடைக்கக்கூடியது – 16
17. ஓய்வூதிய புத்தகம் காணாமல் போனால் – 16
18. கவனமாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட வேண்டிய ஓய்வூதிய ஆவணங்கள் – 17
19. பண்டிகை முன்பணம் – 17
20. பொங்கல் பரிசுத் தொகை – 18
21. வருமானவரி – 18
22. வங்கிக்கடன் – 18
23. ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி – 19
24. ஒரு கருவூலத்தில் இருந்து மற்றொரு கருவூலத்திற்கு ஓய்வூதியத்தை மாற்றுதல் – 20
25. ஐயமும் – தெளிவும் – 21
26. மாதிரி ஓய்வூதிய பலன்கள் கணக்கீடு – 26
27. ஏ.டி.எம். கார்டு வைத்திருக்கும் ஓய்வுதியர்கள் கவனத்திற்கு – 29
28. வருமான வரி: சில குறிப்புகள்... – 40
29. ஓய்வூதியர்களுக்கான படிவங்கள் – 43

01



பணிப் பதிவேட்டில் பதிவுகள்

- பணிப்பதிவேட்டில் பணி சரிபார்த்தல் குறிப்புகள் சம்பள பட்டியல்களுடன் சரிபார்த்து ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பதியப்பட்டிருக்க வேண்டும் (30/6 அன்று மற்றும் 31/12)
- ஆண்டு ஊதிய உயர்வுகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும்.
- தேர்வு நிலை/சிறப்புநிலை ஊதிய நிர்ணய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
- சிறப்பு சேமநல நிதி, **(SPF 1984)** மற்றும் சிறப்பு சேமநல நிதி **(SPF 2000)** ஆகிய திட்டங்களுக்கான முதல் சந்தா பிடித்தத் தொகை விவரமும், கடைசி சந்தா பிடித்தத் தொகை விவரமும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டிருக்க வேண்டும்.
- சிறப்பு சேமநல நிதி, பொது வருங்கால வைப்பு நிதி, குடும்ப பாதுகாப்பு நிதி, இறப்பு மற்றும் பணிக்கொடை ஆகியவைகளுக்கான வாரிசு நியமனம் குறித்த பதிவுகள் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
- பணிப்பதிவேட்டில் கணவன்– மனைவி, குடும்ப உறுப்பினர் குறித்த விவரங்களும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- பணியில் இருக்கும்போதே உங்களுடைய பணிப் பதிவேட்டினை நகல் எடுத்து வைத்துக் கொள்வது நல்லது.

02

ஓய்வூதிய முன்மொழிவுகள் அனுப்புதல்

ஓய்வு பெறுவதற்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு முன்னர் பணிப்பதிவேட்டில் அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்டு ஓய்வூதிய முன்மொழிவுகள் மாநில முதன்மை கணக்காயர், சென்னை அவர்களுக்கு உரிய அலுவலர் வழியாக அனுப்பப்பட வேண்டும்.

03

ஓய்வூதிய பலன்கள்

அ. ஓய்வூதியம்

ஆ. ஓய்வூதியத்தை தொகுத்து பெறுதல்

இ. பணிக்கொடை

ஈ. பொது சேமநலநிதி

உ. சிறப்பு சேமநலநிதி 1984

ஊ. சிறப்பு சேமநலநிதி 2000

எ. ஈட்டிய விடுப்பு

ஏ. சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு

ஐ. பயணப்படி (சொந்த ஊருக்கு)



அ. ஓய்வூதியம்

$$\text{ஓய்வூதியம்} = \frac{\text{கடைசியாக பெற்ற சம்பளம்}^{*}\ (\text{LPD}) \times \text{அரையாண்டு}\ (\text{Ltd to } 60)}{2 \times 60}$$

*__கடைசியாக பெற்ற ஊதியம்__ அடிப்படை ஊதியம் மட்டும்

ஆ. ஓய்வூதியத்தை தொகுத்து பெறுதல்

1/3 x ஓய்வூதியம் x 12 x 8.371 (ஓய்வு பெறும் வயது 58)

= கடைசியாக பெற்ற சம்பளம்** x அரையாண்டுகள் (Ltd to 66)

இ. பணிக்கொடை ——————————————————

4

**__கடைசியாக பெற்ற ஊதியம்__ = அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி

ஈ. பொது சேமநல நிதி

ஓய்வூதிய முன்மொழிவுகள் அனுப்பும்போது பொது சேமநலநிதி கணக்கு முடித்து இறுதி இருப்பாக காட்டப்படும் தொகை.

உ. சிறப்பு சேமநலநிதி (1984)

சந்தா ரூ.2960 + வட்டி (மாதிரி கணக்கீட்டு படிவம் இணைக்கப்பட்டுள்ளது) + அரசின் பங்குதொகை ரூ.10,000

ஊ. சிறப்பு சேமநல நிதி (2000)

சந்தா + வட்டி

எ. ஈட்டிய விடுப்பு

இருப்பில் உள்ளவை (அதிகபட்சமாக 240 நாட்கள்)
(இத்தொகை வருமான வரி கணக்கீட்டிற்கு உட்பட்டதல்ல)

ஏ. சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு

இருப்பில் உள்ளவை (அதிக பட்சமாக 180 அரை நாட்கள் (90 முழு நாட்கள்))
(இத்தொகை வருமான வரி கணக்கீட்டிற்கு உட்பட்டது)

ஐ. ஓய்வு பெற்று சொந்த மாவட்டத்தில் உள்ள இல்லத்திற்குச் செல்ல பயணப்படி கோரலாம்.

SPF - 1984 வட்டித் தொகை மாதிரி கணக்கீட்டுத் தாள் (Working Sheet)


Subscription for 148 Installments		**2960**
Interest allowed upto 31.07.1996 as per Table	**2061**	**5021**
Subscription for 148 Instalments		**2960**
Interest allowed upto 31.07.196 as per Table	**2061**	**5021**
08/1996 to 7/1997 = 5021 x 12 / 100 x 12 /12	603	5624
08/1997 to 7/1998 = 5624 x 12 / 100 x 12 /12	675	6299
08/1998 to 7/1999 = 6299 x 12 / 100 x 12 /12	756	7055
08/1999 to 7/2000 = 7055 x 12 / 100 x 12 /12	847	7902
08/2000 to 7/2001 = 7902 x 11 / 100 x 12 /12	869	8771
08/2001 to 7/2002 = 8771 x 9.5 / 100 x 12 /12	833	9604
08/2002 to 7/2003 = 9604 x 9 / 100 x 12 /12	864	10468
08/2003 to 7/2004 = 10468 x 8 / 100 x 12 /12	837	11305
08/2004 to 7/2005 = 11305 x 8 / 100 x 12 /12	904	12209
08/2005 to 7/2006 = 12209 x 8 / 100 x 12 /12	977	13186
08/2006 to 7/2007 = 13186 x 8 / 100 x 12 /12	1055	14241
08/2007 to 7/2008 = 14241 x 8 / 100 x 12 /12	1139	15380
08/2008 to 7/2009 = 15380 x 8 / 100 x 12 /12	1230	16610
08/2009 to 7/2010 = 16610 x 8 / 100 x 12 /12	1329	17939
08/2010 to 7/2011 = 17939 x 8 / 100 x 12 /12	1435	19374
08/2011 to 11/2011 = 19374 x 8 / 100 x 04 /12	517	21014
12/2011 to 03/2012 = 19374 x 8.6 / 100 x 04 /12	555	
04/2012 to 07/2012 = 19374 x 8.8 / 100 x 04 /12	568	
08/2012 to 03/2013 = 21014 x 8.8 / 100 x 08 /12	1233	22856
04/2013 to 07/2012 = 21014 x 8.7 / 100 x 04 /12	609	
08/2013 to 07/2014 = 22856 x 8.7 / 100 x 12 /12	1988	24844
08/2014 to 07/2015 = 24844 x 8.7 / 100 x 12 /12	2161	27005
08/2015 to 03/2016 = 27005 x 8.7 / 100 x 08 /12	1566	29300
04/2016 to 07/2016 = 27005 x 8.1 / 100 x 04 /12	729	
08/2016 to 09/2016 = 29300 x 8.1 / 100 x 02 /12	396	31637
10/2016 to 03/2017 = 29300 x 8 / 100 x 06 /12	1172	
04/2017 to 06/2017 = 29300 x 7.9 / 100 x 03 /12	579	
07/2017 to 07/2017 = 29300 x 7.8 / 100 x 01 /12	190	
08/2017 to 12/2017 = 31637 x 7.8 / 100 x 05 /12	1028	33266
01/2018 to 03/2018 = 31637 x 7.6 / 100 x 03 /12	601	

For example : Employee retired on 31.03.2018

803100102AB0009	SUBSCRIPTION	2960
803100102AD0005	CONTRIBUTION	10000
803100102AC0007	INTEREST	30306
	TOTAL	**43226**

04

கருவூலத்தில் ஓய்வூதியம் பெற அளிக்க வேண்டிய ஆவணங்கள்



05

முதல் ஓய்வூதியம் பெறுவதற்கு அளிக்க வேண்டிய ஆவணங்கள்

1. மாநிலக் கணக்காய்வு தலைவரிடமிருந்து தங்களுக்கு வரப்பெற்ற ஆணை (அசலாக)
2. வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் முதல்பக்க நகல் (ஓய்வூதியரின் பெயரில் மட்டும் இருக்கலாம் அல்லது ஓய்வூதிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணவர்/மனைவி பெயரில் இணை வங்கிக் கணக்காகவும் இருக்கலாம்) கருவூல கணக்குத்துறை ஆணையரின் கடிதம் எண்.ந.க.037444/2018/உ2 நாள்: 10–10–2018)
3. ஓய்வூதியரின் துறை அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கீழ்க்கண்ட கடிதங்கள்
4. குற்றச்சாட்டு ஏதும் நிலுவையில் இல்லை
6. தற்காலிக ஓய்வூதியம் ஏதும் பெற்று வழங்கப்படவில்லை
7. ஆசிரியர் ஓய்வூதியதாரராக இருப்பின் அவர் மறுநியமனம் செய்யப்பட்டதற்கான ஆணை மற்றும் பணிவிடுவிப்பு ஆணை
8. பணிவிடுவிப்பு ஆணை
9. மனைவி/கணவர் உடன் எடுத்துக் கொண்ட கலர் போட்டோ–4 எண்கள்
11. ஆதார் அட்டை நகல்
12. குடும்ப அட்டை நகல்
13. பான்கார்டு நகல்

மாநிலக் கணக்காயருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, ஓய்வூதியக் கொடுவை ஆணை பெறப்படாத நிகழ்வுகளில், அதன் தற்போதைய நிலையினை, மாநிலக் கணக்காயரின் www.agae.tn.nic.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்

06

குடும்ப ஓய்வூதியம் பெற அளிக்க வேண்டிய ஆவணங்கள்



1. முறையான விண்ணப்பம் (இரண்டு பிரதிகள்)
2. படிவம் 14
3. ஓய்வூதியதாரரின் ஓய்வூதிய புத்தகம் – அசல்
4. விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே உள்ள வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் நகல்
5. ஆதார் கார்டு நகல்
6. பான் கார்டு நகல்
7. குடும்ப அட்டை நகல்
8. விண்ணப்பதாரரின் ஆளறிச் சான்று – (2 எண்கள்)
9. மறுமணம் புரியவில்லை என்பதற்கான சான்று

07

வாழ்வு கால நிலுவைத் தொகை பெறுவதற்கு அளிக்க வேண்டிய ஆவணங்கள்



- முறையான விண்ணப்பம்
- ஓய்வூதியதாரரின் ஓய்வூதிய புத்தகம்
- ஓய்வூதியதாரரின் இறப்பு சான்று
- வாரிசுதாரர் நியமன படிவம்
- வாரிசு படிவம் இல்லாத பட்சத்தில் கீழ்க்கண்ட ஆவணங்களை இணைக்க வேண்டும்
  - ✔ வாரிசு சான்று
  - ✔ ஏனைய வாரிசுகளிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனை இல்லா கடிதங்கள்
- விண்ணப்பதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் நகல்
- விண்ணப்பதாரரின் ஆளறிச் சான்று 2 நகல்கள்

08



குடும்ப ஓய்வூதியம்

உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் =

$$\frac{\text{கடைசியாக பெற்ற சம்பளம் x 50}}{100}$$

சாதாரண குடும்ப ஓய்வூதியம் =

$$\frac{\text{கடைசியாக பெற்ற சம்பளம் x 30}}{100}$$

09

குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியான குடும்ப உறுப்பினர்கள்

அ. கணவன்/ மனைவிக்கு அவர்கள் மறு திருமணம் செய்யும் தேதி வரையிலோ அல்லது வாழ்நாள் முழுவதும்.

ஆ. மகன்/மகளுக்கு 25 வயது வரை அல்லது அவர்கள் திருமணம் செய்யும் தேதிக்கு முந்தைய நாள் வரை (எது முந்தையதோ).

இ. கணவன்/மனைவி மற்றும் குழந்தைகள் இல்லாத நேர்வில் பெற்றோருக்கு உண்டு.

10

திருமணமாகாத / விவாகரத்தான / விதவை / ஆதரவற்ற மகள் / மாற்றுத் திறனாளி / மனநிலை பாதிக்கப்பட்ட மகன் மற்றும் மகள் ஆகியோர்களுக்கு குடும்ப ஓய்வூதியம்



அ. மாற்றுத் திறனாளி மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட மகன் மற்றும் மகளுக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி உண்டு.

ஆ. தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும் குடும்ப ஓய்தியம் பெற தகுதி உண்டு.

இ. திருமணம் ஆகாத விவாகரத்தான மற்றும் விதவை மகளுக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி உண்டு.

ஈ. திருநங்கை மகளுக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி உண்டு.


11

கூடுதல் ஓய்வூதியம்

வயது	80–84	அடிப்படை ஓய்வூதியத்தில் 20% + அகவிலைப்படி
வயது	85–89	அடிப்படை ஓய்வூதியத்தில் 30% + அகவிலைப்படி
வயது	90–94	அடிப்படை ஓய்வூதியத்தில் 40% + அகவிலைப்படி
வயது	95–99	அடிப்படை ஓய்வூதியத்தில் 50% + அகவிலைப்படி
வயது	100–மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் 100% + அகவிலைப்படி

பிறந்த தேதிக்கான ஆவணங்கள்

1. படிவம் 14
2. பான் அட்டை
3. பத்தாம் வகுப்பு சான்று
4. பாஸ்போர்ட்
5. ஓட்டுநர் உரிமம்
6. வாக்காளர் அடையாள அட்டை
7. ஆதார் அட்டை



12

கம்யூடேசன் தொகை முடிவுறுதல்



அரசு கடித எண்A /Pension/92-1 - நாள்: 30-10-1992

ஒரு ஓய்வூதியர் கம்யூடேசன் பெற்று 15 ஆண்டுகள் முடிவுற்றவுடன் மாதாந்திர பிடித்த தொகை நிறுத்தப்பட்டு, மாதாந்திர ஓய்வுதியத்துடன் சேர்த்து வழங்கப்படுவது Restoration of Commutation எனப்படும். அரசு ஆணைப்படி, ஓய்வுதியர் கருவூலத்தில் கம்யூடேசன் தொகை பெற்ற நாளில் இருந்து 15 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் கம்யூடேசன் பிடித்த தொகை நிறுத்தப்படும்.

உதாரணமாக 31–07–2002 அன்று ஒருவர் ஓய்வு பெற்று கருவூலத்தில் தனது ஓய்வுதியம் மற்றும் கம்யூடேசன் தொகையினை 12–09–2002 அன்று பெறுகிறார் எனில், மேற்கூறிய அரசு ஆணைப்படி அவரது கம்யூடேசன் பிடித்த தொகை 11–09–2017 உடன் நிறைவு பெற்று 12–09–2017 முதல் அவருக்கு பிடித்த தொகை சேர்த்து , முழு ஓய்வுதியம் வழங்கப்படும். கம்யூடேசன் நிறைவு குறித்து விதிகளின்படி தனியே விண்ணப்பம் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

13

நேர்காணல்/வாழ்வுகால சான்று

ஓய்வூதியர்கள் தொடர்புடைய கருவூலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் ஜூன் மாதத்திற்குள் உரிய ஆவணங் களுடன் நேர்காணலுக்கு ஆஜராக வேண்டும். அவ்வாறு வர இயலாதவர்கள் வாழ்வுகால சான்று அளிக்க வேண்டும். தவறும் நேர்வில் ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

ஜீவன் பிரமான் (JEEVAN PRAMAAN) என்ற இணையதள வழியாகவும் கருவூலத்திற்கு நேரில் ஆஜராகாமல் நேர்காணல் செய்யலாம்.

14

ஓய்வூதிய புத்தகத்தில் பதிவுகள்

அ. ஓய்வூதிய புத்தகத்தில் ஒவ்வொரு ஆண்டும் நேர்காணலுக்கு வரும்போது அப்போதைய ஓய்வூதியத்தை தங்களது ஓய்வூதிய புத்தகத்தில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆ. திருத்திய ஓய்வூதியப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இ. நேர்காணலுக்கு வந்ததை பதிவிட வேண்டும்

15

ஓய்வூதியர் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்



அ. இத்திட்டம் 1.7.2014 முதல் துவங்கப்பட்டது.

ஆ. இத்திட்டத்தில் ஓய்வூதியர்களும், குடும்ப ஓய்வூதியர்களும் கட்டாயமாக சேர வேண்டும்

இ. கணவன் மற்றும் மனைவி இருவரும் ஓய்வூதியதாரர்களாக இருக்கும் நேர்வில் அவர்களது விருப்பத்தின்பேரில் யாரேனும் ஒருவருக்கு சந்தா பிடித்தம் செய்ய வேண்டும். 1.7.2018 முதல் மாத சந்தா ரூ.350/– பிடித்தம் செய்ய வேண்டும்.

ஈ. 1.7.2018 முதல் 30.6.2022 முடிய உள்ள தொகுப்பாண்டுக்கு அதிகபட்சமாக ரூ.4,00,000/ 7,00,000 (சிறப்பு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகளுக்காக) செலவு செய்ய அனுமதிக்கலாம்.

உ. அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மட்டுமே சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

ஊ. அரசால் பட்டியலிடப்பட்ட நோய்களுக்கு மட்டுமே சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எ. சிகிச்சை மேற்கொள்ளும் முன்பே தொடர்புடைய மருத்துவ மனையை அணுகி முன் அனுமதிபெற்று பணபரிவத்தனமற்ற முறையில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

1. அ.ஆ.எண். 462, நிதி (ஓய்வூதியம்) துறை நாள்: 27.12.2013
2.அ.ஆ.எண். 171, நிதி (ஓய்வூதியம்) துறை நாள்: 16.6.2014

ஏ. கணவன்/மனைவி இருவரில் ஒருவர் ஓய்வூதியதாரராக இருப்பினும் இருவருக்கும் இத்திட்டம் பொருந்தும்.

16

ஓய்வூதியர் இறந்து போன பின்பு குடும்பத்திற்கு கிடைக்கக்கூடியது

அ. வாழ்வுகால நிலுவைத் தொகை

ஆ. தகுதியுள்ள குடும்ப உறுப்பினர் இருந்தால் குடும்ப ஓய்வூதியம்

இ. குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.50,000/–

17

ஓய்வூதிய புத்தகம் காணாமல் போனால்



ஓய்வூதிய புத்தகம் காணாமல் போனால் தொடர்புடைய கருவூலத்தில் விண்ணப்பித்து நகல் பெற்றுக் கொள்ளலாம். அ.ஆ.எண். 30 / நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 01.02.2010

18

கவனமாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட வேண்டிய ஓய்வூதிய ஆவணங்கள்

அ. ஓய்வூதியம் வழங்கும் ஆணை

ஆ. வங்கி கணக்குப் புத்தகம்

இ. ஆதார் அட்டை

ஈ. பான் அட்டை (PAN CARD)

19

பண்டிகை முன்பணம்



ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆண்டுதோறும் பண்டிகை முன்பணமாக ரூ.2000/ வழங்கப்பட்டு 10 சம தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். முதல்முறை விண்ணப்பத்தால் மட்டுமே போதுமானது, அதே பண்டிகைக்கு வருடந்தோறும் முன்பணம் பெற்றுக் கொள்ளலாம்.

அ.ஆ.எண் 75, நிதித்துறை நாள் 14.3.2013

20

பொங்கல் பரிசுத் தொகை

"இ" மற்றும் "ஈ" பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆண்டு தோறும் பொங்கல் பரிசாக ரூ.500/ வழங்கப்படுகிறது. (அ.ஆ.எண் 7, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 8.1.2018.

21

வருமானவரி

வருமான வரி பிடித்தம் செய்யப்பட வேண்டிய உத்தேச வருமான வரி கணக்கிடப்பட்டு மாதந்தோறும் (T.D.S.) முறையில் பிடித்தம் செய்யப்படும். மே 31–ஆம் தேதிக்குள் படிவம் 16 ஓய்வூதியம் பெறும் கருவூலத்தின் மூலமாக பெற்று வருமான வரி கணக்கு உரிய நாளுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.


22

வங்கிக்கடன்

அவரவர் ஓய்வூதியம் பெறும் வங்கியின் நிர்வாகத்தினரை அணுகி தேவைப்பட்டால் வங்கிக் கடனை பெற்றுக் கொள்ளலாம். அதற்கும் கருவூலத்திற்கும் தொடர்பு இல்லை.

23

ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி



அ. ஓய்வூதியர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு உதவ இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆ. இத்திட்டத்தில் ஓய்வூதியர் மட்டுமே சேர முடியும் (குடும்ப ஓய்வூ தியர்கள் சேர இயலாது)

இ. இத்திட்டம் கட்டாயமானதல்ல, விருப்பத்தைப் பொறுத்தது.

ஈ. இத்திட்டத்தில் சேர விருப்பமில்லை என்றால் எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவித்த பின்னர் எப்போதுமே இத்திட்டத்தில் சேர இயலாது.

உ. மாத சந்தா ரூ.80/ ஓய்வூதியர் இறந்தால் அவரது வாரிசுதாரர் (அ) நியமனதாரருக்கு கிடைக்கக்கூடிய தொகை ரூ.50,000/–

ஊ. ஒரு மாதம் சந்தா செலுத்தி ஓய்வூதியர் இறக்க நேரிட்டாலும் ரூ. 50,000/ வழங்கப்படும்

1. அ.ஆ.எண் 762, நிதி துறை, நாள்: 31.12.1996
2. அ.ஆ.எண் 639, நிதி துறை, நாள்: 26.12.1997
3. அ.ஆ.எண் 189, நிதி துறை, நாள்: 7.6.2013

24

ஒரு கருவூலத்தில் இருந்து மற்றொரு கருவூலத்திற்கு ஓய்வூதியத்தை மாற்றுதல்



அ. ஓய்வூதியர் ஓய்வூதியம் பெறும் கருவூலத்திலிருந்து எந்த ஒரு கருவூலத்திற்கும் ஓய்வூதியத்தை மாற்றிக் கொள்ளலாம்.

1. விண்ணப்பம்
2. ஓய்வூதிய கொடுப்பாணை அசல்
3. ஓய்வூதியம் பெறப்படும் வங்கியிலிருந்து தடையில்லா சான்று. (NO OBJECTION CERTIFICATE)

25

ஐயமும் - தெளிவும்



1. **கேள்வி:** ராணுவத்திலும், மாநில அரசிலும் பணிபுரிந்த ஒருவர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு இரண்டு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

   பதில்: தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு இரண்டு குடும்ப ஓய்வூதியமும் கிடைக்கும்.

2 **கேள்வி:** ஓய்வூதிய புத்தகம் காணாமல் போனால் என்ன செய்ய வேண்டும்?

   பதில்: ஓய்வூதியர் உரிய படிவத்தில் உறுதிமொழி அளித்து தாம் ஓய்வூதியம் பெறும் அலுவலகத்திலேயே ஓய்வூதிய புத்தக நகல் பெற்றுக் கொள்ளலாம்.

3 **கேள்வி:** ஓய்வூதியம் பெற குறைந்த பட்ச தகுதி காலம் எவ்வளவு?

   பதில்: ஒருவர் 9 ஆண்டுகள் 9 மாதங்கள் பணிபுரிந்து இருந்தாலே 20 அரை ஆண்டுகளாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு குறைந்த பட்சம் ஓய்வூதியம் வழங்கப்படும்.

4 **கேள்வி:** ஒருவர் ஓய்வு பெறும் நாளன்று இறந்து விட்டால் அவருக்கு என்ன சலுகை கிடைக்கும்?

   பதில்: ஓய்வு பெறும் நாளன்று இரவு 12 மணிக்குள் இறந்தால் அவர் பணியில் உள்ள பணியாளராகவே கருத்தில் கொள்ளப்பட்டு அரசு விதிகள் மற்றும் ஆணையின்படி உள்ள பலன்கள் வழங்கப்படும். அன்று இரவு 12 மணிக்கு மேல் இறந்தால் அவர் ஓய்வூதியராக கருத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய பலன்கள் வழங்கப்படும்.



5 **கேள்வி:** தற்கொலை செய்த அரசுப் பணியாளரின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

பதில்: கிடைக்கும்.

6 **கேள்வி:** ஒருவர் ஓய்வு பெற்று 15 ஆண்டுகளுக்குள் இறந்து விட்டால் தகுதியான குடும்ப உறுப்பினருக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தில் கம்யூடேசன் பிடித்தம் செய்ய வேண்டுமா?

பதில்: பிடித்தம் செய்ய வேண்டியதில்லை. அவர் இறந்த மறுநாள் முதல் முழு ஓய்வூதியமும் வழங்கப்பட வேண்டும்.

7 **கேள்வி:** மறுமணம் செய்து கொண்டால் குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கப்படுமா?

பதில்: மறுமணம் செய்து கொண்டால் அந்த நாள் முதல் குடும்ப ஓய்வூதியம் நிறுத்தப்பட வேண்டும்.

8 **கேள்வி:** சட்டப்படியான இரு மனைவிகள் உள்ள ஒருவருக்கு குடும்ப ஓய்வூதியம் எவ்வாறு வழங்கப்பட வேண்டும்?

பதில்: இருவருக்கும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் வழங்கப்பட வேண்டும்.

9 **கேள்வி:** குழந்தைகளுக்கு எவ்வாறு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் ?

பதில்: பிறப்பு வரிசைப்படி 25 வயது வரை (அல்லது) திருமணம் ஆகும் வரை இந்த இரண்டில் எது முந்தைய தேதியோ அந்நாள் முதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

10 **கேள்வி:** இரட்டை குழந்தைகளுக்கு எவ்வாறு குடும்ப ஓய்தியம் வழங்கப்பட வேண்டும்?


பதில்: இருவருக்கும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் வழங்கப்பட வேண்டும்.

11 **கேள்வி:** அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகைகளை எந்த ஓய்வூதிய பலனில் பிடித்தம் செய்ய வேண்டும்?

பதில்: அரசுக்கு செலுத்த வேண்டிய எந்தவொரு நிலுவை தொகையையும் (கூட்டுறவு சங்கம் உட்பட) பணிக் கொடையில் மட்டுமே பிடித்தம் செய்ய வேண்டும்.

12 **கேள்வி:** பணிக்காலத்தில் காணாமல் போன ஒருவருக்கு ஓய்வுகால பயன்கள் கிடைக்குமா?

பதில்: அரசு விதிகளின்படி காணாமல் போனவரின் குடும்பத்தி னருக்கு சேர வேண்டிய அனைத்து ஓய்வுகால பயன்களும் கிடைக்கும்.



13 கேள்வி: பெற்றோர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

பதில்: கணவன்/மனைவி, குழந்தைகள் இல்லாத நிலையில் பெற்றோருக்கு குடும்ப ஓய்தியம் கிடைக்கும்.

14 கேள்வி: ஒரு பெண் அரசு பணியாளரின் இரண்டாவது கணவருக்கு பிறந்த குழந்தைக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

பதில்: கிடைக்கும்.

15 கேள்வி: ஓய்வு பெற்ற பிறகு திருமணம் செய்து கொண்டால் அந்த ஓய்வூதியர் இறந்து விட்டால் 2வதாக திருமணம் செய்து கொண்டவருக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

பதில்: கிடைக்கும்.

16 கேள்வி: திருமணம் ஆன குழந்தைகளுக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா?

பதில்: மனநிலை பாதிப்பு உள்ளிட்ட மாற்றுத்திறனாளிகளான மகன்/மகள்களுக்கு அவர்கள் திருமணம் ஆகி இருந்தாலும் வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் பெறலாம்.

16 கேள்வி: ஓய்வூதியர் காணாமல் போனால் குடும்ப ஓய்வூதியம் பெற இயலுமா?

பதில்: இயலும். காணமல் போன நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்கு பிறகு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை (FIR) பெறப்பட்டு, உரிய கருவூலம் மூலமாக மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட வேண்டும்.

26

மாதிரி ஓய்வூதிய பலன்கள் – கணக்கீடு

ஒரு அலுவலர் ஓய்வு பெறும் நாளான 31.10.2018 அன்று ரூபாய் 80000/– மாத ஊதியமாக பெறுகிறார்.

Pay Level - 22/cell 13

அகவிலைப்படி : 7%

பிறந்த தேதி : 6.10.1960

பணியில் சேர்ந்த தேதி : 27.12.1987

ஓய்வு பெறும் தேதி : 31.10.2018

D.O.R. : 31.10.2018

D.O.J. : 27.12.1987

———————

4.10.30

———————

மொத்த மற்றும் நிகர பணிக்காலம் 30 ஆண்டுகள் 10 மாதங்கள் 4 நாட்கள்

ஓய்வூதியத்திற்கான அரையாண்டுகள் = 60

பணிக்கொடைக்கானஅரையாண்டுகள் = 62

ஓய்வூதியத்திற்கு கடைசியாக
பெற்ற சம்பளம் (LPD) = 80,000

பணிக்கொடைக்கான கடைசியாக
பெற்ற சம்பளம் (LPD) = 80,000+ 5600 = 85600

ஓய்வூதியம் = க.பெ.ச. (LPD) x அரையாண்டுகள்

———————————————

2 X 60

$$= \frac{80{,}000 \times 60}{2 \times 60} = 40{,}000/-$$

கம்யூடேசன் = 1/3 x ஓய்வூதியம் x 12 x 8.371

(58 வயதில் ஓய்வு பெற்றால் அட்டவணைப்படி மதிப்பு 8.371)

= 1/3 x 40,000 x 12 x 8.371

= 13333 x 8.371 x 12 = 13,39,327/–

பணிக்கொடை = க.பெ.ச. (LPD) x அரையாண்டுகள்

———————————————

4

= 85600 x 62

———————

4

= 1,32,6800/–

Reduced Pension = 40,000 13,333

Reduced Pension = 26667

மாதம் தோறும் பெறப்படும் ஓய்வூதியம்

ஓய்வூதியம்	=	40,000	
(–) Commutation	=	(–) 13,333	
			26,667
7% அகவிலைப்படி	=		2,800
மருத்துவப்படி	=		300
			29,767
(–) மருத்துவக்காப்பீடு	=	350	
(–) குடும்ப நல நிதி	=	80	= 430
நிகரத் தொகை	=		29,337

27



ATM கார்டு வைத்திருக்கும் ஓய்வூதியர்கள் கவனத்திற்கு!

ATM கார்டு வைத்திருக்கும் ஓய்வூதியர்களின் கனிவான கவனத்திற்கு...



முன்பெல்லாம் ஒரு வங்கியில் கணக்கு வைத்து பராமரிப்பது என்பது மிகப் பெரிய விஷயமாக இருந்தது. ஆனால், இப்போதோ ஒருவருக்கே பல வங்கிகளில் கணக்குகள் இருப்பது என்பது சர்வசாதாரணம் என்றாகி விட்டது. அதன் விளைவு, இன்றைக்கு பலரது பர்ஸையும் வண்ண, வண்ண ஏ.டி.எம் கார்டுகள் அலங்கரித்து வருவதைப் பார்க்கலாம். இது ஒருபுறம் வளர்ச்சியாக இருந்தாலும், இதன் பாதிப்புகள் அதிகம்..? அவை என்ன?

கார்டு தொலைந்தால்..?

சிலர் ஏ.டி.எம் கார்டை தொலைத்துவிட்டு, தொலைத்தது கூட தெரியாமல் பல மணிநேரம் இருந்து விடுகிறோம். பிறகு ஞாபகம் வந்து தேடிப் பார்த்துவிட்டு, வங்கியின் உதவி எண்ணுக்கு தகவல் சொல்வதற்குள், கிட்டத்தட்ட நான்கு, ஐந்து முறையாவது அந்த கார்டு பயன்படுத்த பட்டு பணம் திருடப்பட்டிருப்பது தெரியவரும்.

‘பின்’ நம்பர் தெரியாமல் எப்படி பயன்படுத்துவார்கள்?



ஒரு ஏ.டி.எம் கார்டை கொண்டு ஏ.டி.எம்.–மில்பணம்எடுக்க ‘பின்’நம்பர் தேவை. ஏ.டி.எம் கார்டு தொலைந்த வுடன் அதை உடனே சம்மந்தப்பட்ட வங்கிக்கு தெரியப்படுத்தி கார்டை பிளாக் செய்வது மிக மிக முக்கியம் ஏமாற்றுப் பேர்வழிகள் பலவிதம்! சில சமயங்களில் ஏ.டி.எம். சென்டரில் பின்னால் நிற்கும் ஆட்களோ, செக்யூரிட்டியோகூட தண்ணீர் எடுக்க வருவதுபோல் வந்து பாஸ்வேர்டை தெரிந்து வைத்துக்கொண்டு மோசடியில் ஈடுபட வாய்ப்புள்ளது. எனவே, ஏ.டி.எம். மையத்தை விட்டு வெளியில் வரும்போது கார்டு இருக்கிறதா என்று உறுதி செய்து விட்டு வெளியேறுவது நல்லது. தகவல்கள் நம்மிடம் இருந்து கிடைத்துவிட்டால், மின்னல் வேகத்தில் டூப்ளிகேட் கார்டை தயாரித்து மோசடியில் ஈடுபட அதிக வாய்ப்பு உள்ளது. என்னதான் அவசர வேலையாக இருந்தாலும் நண்பர்கள், உறவினர்களிடம் ஏ.டி.எம். கார்டைக் கொடுத்து பணம் எடுக்க அனுப்புவதையும் தவிர்க்க வேண்டும். ஏ.டி.எம்ல் பணபரிவர்த்தனை மேற்கொள்ளும்போது செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

‘பின்’ நம்பர் பத்திரம்!

முடிந்தவரை ஏ.டி.எம். பின் நம்பரை யாரும் எளிதில் கண்டுபிடிக்காத மாதிரி வைத்திருப்பது அவசியம். பிறந்த நாள், திருமண நாள், வண்டி நம்பர், அலுவலக எண் போன்ற எளிதில் கணிக்கக் கூடிய எண்களைத் தவிர்க்கவும். பாஸ்வேர்ட் மறந்துவிடும் என ஏ.டி.எம். கார்டின் அட்டையிலேயே பாஸ்வேர்டினை எழுதி வைக்க வேண்டவே

வேண்டாம். நான் தஞ்சாவூர் மாவட்ட கருவூல அலுவலராக பணியாற்றியபோது, ஒரு ஓய்வூதியர் தன்னுடைய ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தி ஏ.டி.எம்.–லிருந்து ரூ.15,000 வீதம் மூன்று முறை யாரோ எடுத்துவிட்டதாக தெரிவித்தார். நான் இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட வங்கியின் கிளை மேலாளரிடம் பேசி பணம் எடுக்கப்பட்டதாக ஓய்வூதியர் சொன்ன தேதிகளில், ஏ.டி.எம்.ன் கேமராவில் பதிவான வீடியோவை பார்த்தபோது அவருடைய பேரனே பணத்தை எடுத்திருப்பது தெரிய வந்தது.



ஸ்கேனிங் திருட்டு!

நாம் பயன்படுத்தும் ஏ.டி.எம். கார்டு பிளாஸ்டிக்கால் ஆனது. அதன் பின்புறம் ஃபிலிம் போல ஒரு ஸ்டிக்கர் இருக்கும். அதில் உள்ள விவரங்கள்தான் ஏ.டி.எம். மெஷினுக்குத் தேவையான விவரங்கள். ஒரிஜினல் கார்டை ஒரு கருவியில் சொருகி, அதிலுள்ள தகவல்களை காப்பி எடுத்துக்கொண்டு, அதை வேறொரு பிளாஸ்டிக் கார்டில் பதிவு செய்து டூப்ளிகேட் கார்ட் ரெடி செய்து மோசடி செய்யவும் அதிக வாய்ப்பிருக்கிறது. எனவே, ஓட்டல்கள், பார்கள் போன்ற இடங்களில் கார்டை கொடுத்துவிட்டு பில் போடச் சொன்னால், அவர்கள்



அதைக் ஸ்கேன் செய்துவிடலாம் என்பதால், நேரில் சென்று பில் போட்டு விட்டு வருவது முக்கியம்.



ஆன்லைன் திருட்டு!

ஏ.டி.எம். எண், பாஸ்வேர்ட்ஐ இணையத்தில் அளித்து, டிக்கெட், ஷாப்பிங் என்று பல தேவைகளுக்கும் பயன்படுத்தும் போது, அது பாதுகாப்பான வலை தளமா, ஃபிஷிங் திருட்டா என்று விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். இணையத்தில் பாதுகாப்பில்லாத தளங்களில் பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்வதை தவிர்க்கவும்

தனியார் பஸ் டிரைவரிடம் ஏ.டி.எம்., கார்டை மாற்றி மோசடி!

தலைவாசல் அருகே, தனியார் பஸ் டிரைவரின் ஏ.டி.எம்., கார்டை மாற்றி மோசடியில் ஈடுபட்டவர்களை, போலீசார் விசாரிக்கின்றனர். சின்னசேலத்தை சேர்ந்த ஜெயவேல், 40, தனியார் பஸ் டிரைவர். இவர் நேற்று முன்தினம் மாலை, சின்னசேலத்தில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஏ.டி.எம்., மையத்தில் பணம் எடுக்க சென்றார். அப்போது, மையத்தின் உள்ளே இரண்டு பெண்கள், ஒரு சிறுவன் இருந்துள்ளனர். ஜெயவேல் பணம் எடுக்க முயற்சித்தபோது, பணம் வரவில்லை. இதையடுத்து அங்கிருந்த இரண்டு பெண்கள், உதவி செய்வது போல் நடித்து, 5,000 ரூபாய் எடுத்து கொடுத்துள்ளனர். பின்னர், ஜெயவேலுவின் கார்டை பெண்கள் எடுத்து கொண்டு, போலி கார்டை கொடுத்துள்ளனர். அவசரத்தில் அதை கவனிக்காமல், ஜெயவேல் சென்றுவிட்டார். இந்நிலையில், தலைவாசலில் உள்ள ஏ.டி.எம்., மையத்தில், 35 ஆயிரம் ரூபாய் எடுத்துள்ளதாக, ஜெயவேலு

மொபைல்போனுக்கு எஸ்.எம்.எஸ்., வந்தது. ஏமாற்றப்பட்டதையறிந்த ஜெயவேல், ஏ.டி.எம்., மையத்திற்கு வந்தார். அப்போது, அங்கு இரண்டு பெண்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களை பிடித்து, தலைவாசல் போலீசில் ஒப்படைத்தார். இவர்கள் ஓசூரை சேர்ந்த பிரியா, 34, ஜெயா, 30, என்பது விசாரணையில் தெரியவந்தது. இவர்களிடம், தலைவாசல் போலீசார் விசாரிக்கின்றனர்.

ஏ.டி.எம். மோசடி
ராயப்பேட்டையில் ஏ.டி.எம்.மில் பணம் எடுத்து தருவதாக கூறி ரூ.40 ஆயிரம் மோசடி



ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க முடியாமல் தவித்தவரிடம் பணம் எடுக்க உதவுவது போல் நடித்த மர்ம ஆசாமி, அவரது கார்டில் இருந்து ரூ.40 ஆயிரத்தை மோசடி செய்தார். அவரை போலீசார் தேடிவருகிறார்கள்.

சென்னை ராயப்பேட்டையை சேர்ந்தவர் காஜா நிஜாமுதீன் (வயது 57). இவர் நேற்று முன்தினம் இரவு ஐஸ்அவுஸ் பெசன்ட் சாலையில் உள்ள ஒரு வங்கியின் ஏ.டி.எம். மையத்திற்கு பணம் எடுக்க சென்றார். அவரது கையில் அடிபட்டிருந்ததால் பணம் எடுக்க முடியாமல் தவித்தபடி நின்றார்.

அப்போது அந்த வழியாக வந்த மர்ம ஆசாமி ஒருவர் அவருக்கு பணம் எடுக்க உதவி செய்வது போல நடித்தார். காஜா நிஜாமுதீனிடம் இருந்து ஏ.டி.எம். கார்டை வாங்கினார். அதன் ரகசிய குறியீட்டு எண்ணையும் தெரிந்து கொண்டார். பின்னர் பணம் எடுப்பதுபோல நாடகமாடினார்.

பின்னர் அவர் ஏ.டி.எம். மெஷின் வேலை செய்யவில்லை என்று

கூறி ஏ.டி.எம்.கார்டை காஜாநிஜாமுதீனிடம் திருப்பி கொடுத்தார். பின்னர் அந்த மர்ம ஆசாமி அங்கிருந்து போய்விட்டார்.

கார்டை மாற்றி பணம் மோசடி

அவர் போனபிறகு தான் ஏ.டி.எம். கார்டை மர்ம ஆசாமி மாற்றி கொடுத்திருப்பது காஜா நிஜாமுதீனுக்கு தெரியவந்தது. அவருடைய ஏ.டி.எம். கார்டை மர்ம ஆசாமி எடுத்து சென்றுவிட்டார். இதற்கிடையே அந்த கார்டையும், ரகசிய குறியீட்டு எண்ணையும் பயன்படுத்தி காஜா நிஜாமுதீனின் வங்கி கணக்கில் இருந்து ரூ.40 ஆயிரம் பணத்தை மர்ம ஆசாமி சுருட்டிவிட்டார்.

இதுதொடர்பாக காஜா நிஜாமுதீன் ஐஸ்அவுஸ் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஏ.டி.எம். மையத்தில் உள்ள கண் காணிப்பு கேமராவில் பணத்தை சுருட்டிய மர்ம ஆசாமியின் உருவம் பதிவாகியுள்ளது. அதைவைத்து அவரை போலீசார் தேடிவருகிறார்கள்.

ஆதார் எண் மூலம் மோசடி

ஆதார் எண் உங்களுக்கு இருக்கிறதா என்றுகேட்டு உங்கள் மொபைல் போனில் கேட்பார்கள். ஆம் எனில் நம்பர் 1–ஐ அழுத்தவும் என்பார்கள். அழுத்தியவுடன், ஆதார் எண்ணை அழுத்தவும் என்று சொல்வார்கள். பிறகு ஒரு OTP (One Time Password) உங்கள் மொபைலுக்கு வரும். அந்த எண் என்ன என்று கேட்பார்கள். நீங்கள் அந்த நம்பரை சொல்லிய உடனே உங்கள் பேங்க் அக்கவுண்டில் உள்ளபணம் முழுவதும் வழித்து எடுக்கப்பட்டு விடும்.



ஏனெனில் உங்கள் ஆதார் எண் வங்கியில் அக்கவுண்ட் நம்பருடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே ஆதார் எண்ணை போனில் யாருக்கும் சொல்லாதீர்கள்.



ஏடிஎம்மில் இப்படியும் உங்கள் பணம் பறிபோகலாம்!

ஏ.டி.எம். எந்திரத்தில் பணம் எடுக்க வருபவர்களின் கவனத்தை திசைத் திருப்பி பணத்தை அபேஸ் செய்துவந்த திருடனை பிடித்த போலீஸார், அந்த நபர் திருடிய விதத்தைப் பார்த்து வியந்து போயுள்ளனர்.

சென்ட்ரல் ரயில் நிலைய வளாகத்தில் உள்ள ஏடிஎம்களில் பணம் எடுப்பவர்களின் பணம் திருடப்படுவதாக தொடர்ச்சியாக புகார்கள் வங்கியிலிருந்தும், வாடிக்கையாளர்கள் சார்பாகவும், சென்ட்ரல் ரயில்வே போலீசுக்கும், அருகில் உள்ள பெரியமேடு காவல் நிலையத்திற்கும் அதிக அளவு புகார்கள் வந்தது.

இதையடுத்து போலீசார் புகார் கூறியவர்கள் பணம் எடுத்த நாட்களில் அந்தந்த ஏடிஎம் மையங்களில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடுத்து சோதனையிட்டனர். அப்போது அனைத்து சம்பவங்களில் ஒரு நபர் இருப்பது தெரியவந்தது. அனைத்து சம்பவங்களிலும் இந்த இளைஞர் எப்படி அங்கு இருக்கிறார் என்று குழப்பமடைந்த போலீசார் சம்பந்தப்பட்ட வாடிக்கை யாளர்களிடம் இளைஞர் புகைப் படத்தை காட்டி விசாரணை நடத் தினர். சிலர் எங்களுக்கு தெரிய வில்லை, ஞாபகமில்லை என்று தெரிவித்தனர், சிலர் ஆமாம் சார் இவர்தான் அந்த நேரத்தில் அங்கு இருந்தார் என்று தெரிவித்தனர். சிலர் இவர்தான் சார் பணம் எடுக்கும்போது ஏடிஎம் மெஷின் வேலை செய்யவில்லை என்று கூறி பக்கத்து மெஷினில் எடுக்கச் சொன்னார் என்று தெரிவித்தனர்.

போலீசார் அந்த இளைஞர் மீது சந்தேகமடைந்து சிசிடிவி காட்சி களை பார்த்தனர். அப்போது அந்த இளைஞர் சம்பந்தப்பட்டவர்களிடம் பணம் எடுக்கும்போது ஏதோ கூறு வதும், பின்னர் அவர் ஏடிஎம்மில் பணம் எடுத்து விட்டுச் செல்வதும் தெரியவந்தது.

போலீசார் அந்த இளைஞரை பிடிக்க வலைவிரித்து காத்திருந்தனர். வழக்கம்போல் ஏ.டி.எம்.–மில் தனது கைவரிசையை காட்ட வந்த அவர் ரயில்வே போலீசாரிடம் சிக்கினார். அவரைப் பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அந்த இளைஞர்

பெயர் கோபி கிருஷ்ணா என்பது தெரிய வந்தது.

விசாரணையில் அவர் கூறியது போலீசாரை திடுக்கிட வைத்தது. இப்படியெல்லாம் கூடவா ஏமாற்று வார்கள் என்று சிரித்துக் கொண் டனர். ஏ.டி.எம்.–மில் பணம் எடுக்க வருபவர்களை அவர்கள் அறியா மலே நூதன முறையில் ஏமாற்றி லட்சக்கணக்கில் பணம் எடுத்த அந்த நபர் குறிப்பிட்ட தொகை சேர்ந்தவுடன் விமானத்தில் சொந்த ஊருக்கு பறந்து விடுவாராம்.

எப்படி பணத்தை நூதன முறை யில் ஏமாற்றி எடுப்பேன் என்பதை அந்த நபர் நடித்து காட்டியுள்ளார். டிப்டாப்பாக உடையணிந்து இரண்டு எந்திரங்கள் உள்ள ஏடிஎம்மில் சென்று நின்று கொள்வார். பணம் எடுக்க வருபவர்கள் ஒரு எந்திரத்தில் கார்டை சொருகி வெளியே எடுத்தவுடன் இவர் அவசரமாக குறுக்கிட்டு சார் இந்த மெஷின் வேலை செய்யவில்லை அந்த மெஷினில் எடுத்துக் கொள் ளுங்கள் என்று கூறுவார்.

பணம் எடுக்க வந்தவர் நன்றி கூறிவிட்டு அடுத்த எந்திரத்தில் கார்டை நுழைத்து பணம் எடுப்பார். இவர், அவர்கள் பதிவு செய்யும் சீக்ரெட் நம்பரை கவனித்து வைத்துக் கொண்டு டக்கென்று அந்த நம்பரை முதலில் கார்டை நுழைத்த எந்திரத்தில் அந்த ரகசிய எண்ணை பதிவு செய்து பணத்தை எடுத்து விடுவார். இதில் பல நேரம்



அவருக்கு அதிர்ஷ்டம் அடிக்கும். கணக்கில் கணிசமாக பணம் வைத்துள்ளவர்கள் பணத்தை அழகாக சுருட்டிவிடுவார்.

இப்படி சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள பல ஏ.டி.எம்.–களில் ஒரு நாளைக்கு பல வாடிக்கையாளர்களை ஏமாற்றி பணம் எடுப்பார். இப்படி கணிசமாக சேரும் பணத்தில் சொந்த ஊருக்கு விமானத்தில் சென்று வருவார். நூதனமான முறையில் ஏமாற்றும் இதுபோன்ற நபர்களை பொது மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்று போலீசார் எச்சரித்துள்ளனர்.

பணம் எடுக்கும்போது அருகில் யாரையும் நிற்க அனுமதிக்கக் கூடாது என்றும் அப்படி அனுமதித் தால் பணம் பறிபோக வாய்ப்புண்டு என்றும் எச்சரித்துள்ளனர். நூதன மான முறையில் பணத்தை திருடி வந்த நபர் பெரியமேடு போலீசில் ஒப்படைக்கப்பட்டார்.

-நன்றி: இந்து தமிழ் நாளிதழ் 13.11.2018

வங்கி அதிகாரி போல பேசி மோசடி:

ரூ.90 ஆயிரத்தை பறிகொடுத்த அரசு அதிகாரி மனைவி மாரடைப்பில் சாவு

சென்னையில் பரிதாபம்

சென்னை, ஜன.24- அரசு அதிகாரி மனைவியிடம் வங்கி அதிகாரி போல பேசி ரூ.90 ஆயிரத்தை ஒரு மர்ம கும்பல் மோசடி செய்துள்ளது. இதனால் அவருக்கு அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு பரிதாபமாக இறந்தார்.

அதிகாரி மனைவி

சென்னை அண்ணா நகரை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவர் கருவூல அதிகாரியாக வேலை பார்த்து ஓய்வுபெற்றவர். இவர் ஏற்கனவே இறந்து விட்டார். இவரது மனைவி ஜெயலட்சுமி (வயது 75) அண்ணா நகரில் தனியாக வசித்து வருகிறார். இவரது மகன் சேகர் (50) திருச்சி மாவட்டத்தில் தாசில்தாராக பணிபுரிந்து வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெயலட்சுமியின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்மநபர் வங்கியிலிருந்து அதிகாரி பேசுவதாக கூறி, உங்கள் ஏ.டி.எம். கார்டு காலாவதியாகிவிட்டது, புதிய ஏ.டி.எம். கார்டு வழங்குவதற்காக அந்த கார்டில் உள்ள 16 இலக்க எண்களை கூறும்படி கேட்டார்.

ரூ.90 ஆயிரம் மோசடி


இதை அறியாத ஜெயலட்சுமியும் வங்கியில் இருந்துதான் பேசுகிறார்கள் என்று நினைத்து 16 இலக்க எண், ரகசிய குறியீட்டு எண், செல்போனுக்கு வந்த ஒன்டைம் பாஸ்வேர்டு ஆகிய வற்றை அந்த நபருக்கு தெரிவித்துவிட்டார். சிறிது நேரத்தில் ஜெயலட்சுமியின் வங்கி கணக்கிலிருந்து ரூ.90 ஆயிரத்தை மர்மநபர்கள் எடுத்து விட்டனர்.

